முதலமைச்சர் அலுவலகம்,
புதுச்சேரி

தேதி: 31.03.2020

## செய்திக் குறிப்பு

புதுச்சேரி மாநிலத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க ஊரடங்கு உத்தரவு 23.03.2020 முதல் 14.04.2020 வரை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் நோக்கில், புதுச்சேரி மாநிலத்தின் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.2000/- வழங்கப்படவுள்ளது. கடைகள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பணிபுரிவோர்க்கு எவ்வித பிடித்தமும் செய்யாமல் சம்பளம் வழங்கவேண்டும் என்று சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் தங்கியுள்ள வெளிமாநிலத் தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களை இந்தமாத வாடகை கேட்டு வலியுறுத்தக்கூடாது என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, கோவில் மற்றும் வக்பு நிலங்களில் குடியிருப்பவர்களிடம் வாடகையை வசூலிப்பதை மூன்று மாதங்கள் வரை ஒத்திவைக்குமாறும், மேற்கூறிய இடங்களை வர்த்தக ரீதியாக பயன்படுத்துவோரிடம் வாடகையை வசூலிப்பதை ஒரு மாதம் வரை ஒத்திவைக்குமாறும் இந்து அறநிலையத்துறை மற்றும் வக்பு வாரியத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு.வே.நாராயணசாமி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

OFFICE OF THE CHIEF MINISTER
PUDUCHERRY